මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல.:PRE/2024/80** **2024.09.14**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

**எவரேனுமொரு வேட்பாளர் பிற வேட்பாளர்களை ஊக்குவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.**

இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்கள் வேட்புமனுக்களை சமர்ப்பித்திருப்பது தமது வெற்றிக்காக என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நம்பிக்கையாகும். ஆயினும், தற்போது சில சனாதிபதி வேட்பாளர்கள் பிற வேட்பாளர்களுக்காக அல்லது அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, தேர்தல் ஆணைக்குழுவும் அந்த நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் முற்றிலும் தேர்தல் சட்டத்திற்கு முரணானவை. அவ்வாறான சட்டரீதியற்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென தேர்தல் ஆணைக்குழு அனைத்து சனாதிபதி வேட்பளர்களிடமும் வேண்டிக்கொள்கின்றது.

அவ்வாறே, தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு மாற்றமாக சட்டரீதியற்ற முறையில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுமிடத்து ஏற்புடைய இரண்டு தரப்பினர்களுக்கும் அதாவது, ஊக்குவிக்கும் வேட்பாளருக்கும் ஊக்குவிப்புக்கு ஆளாகும் வேட்பாளருக்கும் எதிராக தேர்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் அறியத்தருகின்றேன்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடத்துவதற்கு அனைத்து வேட்பாளர்களினதும் ஒத்துழைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்குமென எதிர்ப்பார்க்கின்றேன்.

**ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**